Dinamani 23/3/17 pg.no.4



# 'தொழில் முனைவோராக விடாமுயற்சி அவசியம்'

தாம்பரம், மார்ச் 22: தொழில் முனைவோராக திகழ விடாமுயற்சியும், கடும் உழைப்பும் அவசியம் என்று தமிழக அரசின் தொழில் முனைவோர் நிறுவனத்தின் முதன்மைச் செயலரும், இயக்குநருமான கே.ராஜாராமன் கூறினார்.

மேற்கு தாம்பரம், ஸ்ரீசாய்ராம் இன்ஸ்டியூட் ஆஃப் டெக்னாலஜி பொறியியல் கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற கல்லூரி இறுதியாண்டு மாணவர்களின் செயல்திறன் கண்காட்சியைத் தொடங்கி வைத்து அவர் மேலும் பேசியது:

பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் பெரும்பாலோர் வேலை தேடுவோர்களாக தான் உள்ளனர். அவர்களுக்கு சொந்தமாக தொழில் தொடங்க பயம்; தொழிலை வெற்றிகரமாக நடத்த பயம்.

தொழில் தொடங்குவதற்கு முக்கியத் தேவை முயற்சி தானே தவிர பணம் அல்ல.

சிறிய அளவில் தொடங்கி படிப்படியாக உயர முடியும். தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் ஏராளம் உள்ளன. இந்த வாய்ப்புகள் குறித்த தகவல்களைச் சேகரியுங்கள்.



ஸ்ரீசாய்ராம் இன்ஸ்டியூட் ஆஃப் டெக்னாலஜி பொறியியல் கல்லூரியில் புதன்கிழமை நடைபெற்ற செயல்திறன் கண்காட்சியைப் பார்வையிடுகிறார் தமிழக தொழில் முனைவோர் நிறுவனத்தின் முதன்மைச் செயலரும், இயக்குநருமான கே.ராஜாராமன். உடன் கல்லூரி தலைமை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து, முதல்வர் கே.பழனிக்குமார்.

இங்கு பயின்ற முன்னாள் மாணவர்கள் நடத்திவரும் தொழில் நிறுவனங்கள் குறித்த தகவல்களைச் சேகரித்து அவர்களிடம் ஆலோசனைகள் கேட்கலாம். அவர்கள் உதவியுடன் தொழில் வாய்ப்புகளைப் பெறலாம்.

தொழிலில் எதிர்வரும் பல்வேறு பிரச்னைகளையும், சவால்களையும் துணிச்சலுடன் எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்திக் கொள்ளுங்கள் என்றார் அவர். ஸ்ரீசாய்ராம் கல்விக் குழுமத் தலைமை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து, முதல்வர் கே.பழனிக்குமார், ஒருங்கிணைப்பாளர்கள் ஜி.பிரகாஷ், பி.ராயவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.